## உலக அளவில் நிலவும் நம்பிக்கை பற்றாக்குறையை

# 'எல்லோருக்கும் எல்லாம்' மந்திரம் மாற்றும்

● **21-ம் நூற்றாண்டில் மனித குலத்தின் நலனை முன்னிறுத்தி, முன்னேறிச் செல்ல வேண்டும் என்று ஜி-20 உச்சி மாநாட்டில் உறுதிபடத் தெரிவித்தார் பிரதமர் மோடி.**

● **புதுடெல்லி**

டெல்லியில் நேற்று ஜி-20 உச்சி மாநாட்டைத் தொடங்கிவைத்த பிரதமர் நரேந்திர மோடி, உலக அளவில் நிலவும் நம்பிக்கை பற்றாக்குறையை, 'எல்லோருக்கும் எல்லாம்' மந்திரம் நிச்சயம் மாற்றும் என்று உறுதிபடக் கூறினார்.

ஜி-20 அமைப்பின் இந்த ஆண்டுக்கான தலைமையை இந்தியா ஏற்றிருக்கிறது. இதையடுத்து, நாடு முழுவதும் பல்வேறு மாநாடுகள் நடைபெற்றன. இந்நிலையில், ஜி-20 உச்சி மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது. இதில், அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக் உட்பட பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாநாட்டைத் தொடங்கிவைத்து பிரதமர் மோடி பேசியதாவது: நாம் கூடியிருக்கும் இடத்திலிருந்து சில கி.மீ. தொலைவில், 2,500 ஆண்டுகள் பழமையான அசோகர் தூண் அமைந்துள்ளது. அதில் பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்ட எழுத்துகளில், 'மனித குலம் எப்போதும் நலம், வளம், மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய மண்ணின் இந்தப் பொன்மொழியை நினைவுகூர்ந்து ஜி-20 உச்சி மாநாட்டைத் தொடங்குகிறோம்.

இந்த 21-ம் நூற்றாண்டு ஒட்டுமொத்த உலகத்துக்கும் புதிய திசையைக் காட்டுகிறது. பழைய சவால்களுக்கு புதிய தீர்வுகளைக் காண்பதுடன், மனித குலத்தின் நலனை முன்னிறுத்தி, நாம் ஒற்றுமையுடன் முன்னேறிச் செல்ல வேண்டும்.

கரோனா பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு 'நம்பிக்கைப் பற்றாக்குறை' என்ற மிகப் பெரிய நெருக்கடியை உலகம் எதிர்கொண்டு வருகிறது. இதற்கு 'பரஸ்பர நம்பிக்கை'



↑ டெல்லியில் நேற்று தொடங்கிய ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன், தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ரமாபோஸா, பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, உலக வங்கித் தலைவர் அஜய் பங்கா ஆகியோரை வரவேற்ற பிரதமர் நரேந்திர மோடி. படம்: பிடிஐ

மூலம் தீர்வுகாண முடியும். அனைவருக்குமான ஆதரவு, வளர்ச்சி, நம்பிக்கை, முயற்சி என்ற தாரக மந்திரத்தை இந்தியா பின்பற்றி வருகிறது. இதன்படி, உலக அளவில் நிலவும் நம்பிக்கைப் பற்றாக்குறையை, 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற இந்தியாவின் தாரக மந்திரம் நிச்சயம் மாற்றும். மனித குலத்தின் நன்மையைக் கருதி, ஒட்டுமொத்த உலகமும் ஒன்றிணைய வேண்டும் என்று இந்தியா அழைப்பு விடுக்கிறது.

### சர்வதேச சவால்கள்

உலகப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு, வடக்கு, தெற்கு நாடுகளிடையே பிளவு, கிழக்கு, மேற்கு நாடுகளிடையே இடைவெளி, உணவு தானியம், எரிபொருள், உரம், தீவிரவாதம், சைபர் பாதுகாப்பு, சுகாதாரம், எரிசக்தி, தண்ணீர் சார்ந்த பல்வேறு சர்வதேசப் பிரச்சினைகள், சவால்களை நாம் எதிர்கொண்டு வருகிறோம். இவற்றுக்கு ஒன்றிணைந்து தீர்வுகாண வேண்டும்.

இந்தியாவில் நடைபெற்ற ஜி-20 அமைப்பு மாநாடுகளை மக்கள் இயக்கமாக மாற்றினோம். சுமார் 60 நகரங்களில் நடைபெற்ற 200-க்கும் மேற்பட்ட மாநாடுகளில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, ஜி-20 அமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியத்தை இணைக்க இந்தியா பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையை ஜி-20 உறுப்பு நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டன. இவ்வாறு அவர் பேசினார்.

கடந்த ஆண்டு ஜி-20 அமைப்பின் உச்சி மாநாடு இந்தோனேஷியாவின் பாலியில் நடத்தப்பட்டது. அப்போது 'பாலி பிரகடனம்' நிறைவேற்றப்பட்டது. இதேபோல, தற்போது டெல்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டை யொட்டி டெல்லி பிரகடனத்தை இந்தியா தயாரித்துள்ளது.

பூமியில் அமைதியை நிலைநாட்ட வேண்டும். ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதிசெய்ய வேண்டும். உலகப் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்த வேண்டும். சர்வதேச டிஜிட்டல் கரன்சி குறித்து ஆலோசிக்க வேண்டும். கடல்சார் வணிகத்தை மேம்படுத்த வேண்டும். கடல் வளத்தைப் பாதுகாக்க வேண்டும். சர்வதேச அளவில் ஊழல்களை ஒழிக்க வேண்டும்.

உலக நாடுகளில் பசி, பட்டினி, ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்க வேண்டும். உணவு தானியங்கள், எரிசக்தி தட்டுப்பாட்டைப் போக்க வேண்டும். சர்வதேச சுகாதாரக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பசுமைத் திட்டங்களை அமல்படுத்த வேண்டும். பருவநிலை மாறுபாட்டை தடுக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிக்க வேண்டும்.

பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும். பாலின சமநிலை, பெண்கள் முன்னேற்றத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி கிடைப்பதை தடுக்க வேண்டும். ஒன்றுபட்ட உலகத்தை உருவாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட அம்சங்கள் டெல்லி பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளன.

(மேலும் செய்தி, படங்கள் உள்ளே...)

### சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் தரைமட்டம்

# மொராக்கோவில் 1,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

● காசாபிளாங்கா

மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்துக்கு இதுவரை 1037 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நிலநடுக்கத்தால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மரண ஓலங்கள் கேட்டுக் கொண்டே இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

மொராக்கோ நாட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.11 மணிக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.8 புள்ளி என்ற அளவில் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் வீடுகள், பல்வேறு கட்டிடங்களில் இருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தனர்.

நிலநடுக்கத்துக்கு இதுவரை 1037 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. 300-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் சிறிய அளவில் காயமடைந்து உயிர் தப்பியுள்ளனர்.

நள்ளிரவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் எனத் தெரிகிறது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அந்நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினர், போலீஸார், தீயணைப்புப் படையினர் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இரவு, பகலாக அங்கு மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நாட்டின் தலைநகர் ரபாத் முதல் மாரகேஷ் பகுதி வரை நிலநடுக்கத்தால் சேதம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளிலும் பயங்கர பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் பல இடங்களில் வீடுகள், கட்டிடங்கள் தரைமட்டமாயின.

ரபாத் முதல் காசாபிளாங்கா நகரம் வரை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பல பகுதிகளில் நிலநடுக்கத்தின் பாதிப்பு இருப்பதால் எங்கெங்கும் மரண ஓலம் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

தலைநகர் ரபாத் பகுதியிலிருந்து தென்மேற்கு பகுதியான மாரகேஷ் பகுதியை மையமாகக் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தின் அதிர்வுகள் ரபாத், காசாபிளாங்கா, எஸ்ஸா அவுரா பகுதிகளிலும் நன்றாக உணரப்பட்டுள்ளது.

மாரகேஷ் பகுதியைச் சேர்ந்த அப்தெல்ஹக் இல் அம்ரானி கூறும் போது, "இப்பகுதியில் கடும் நில அதிர்வை நாங்கள் உணர்ந்தோம். அதன் பின்னர்தான் அது நிலநடுக்கம் என்பதையே நாங்கள் அறிந்தோம். சில இடங்களில் கட்டிடங்கள் குலுங்கின. இதையடுத்து எனது வீட்டிலிருந்து நான் வெளியே ஓடிவேன். தெருக்களில் பலர் நிலநடுக்கத்தால் அதிர்ச்சியடைந்து வெளியே கூடியிருந்தனர்.

குழந்தைகள், பெண்கள் அலறும் சத்தத்தைக் கேட்க முடிந்தது. நகரின் பல பகுதிகளில் மரண ஓலங்கள் எழுந்துள்ளன. அனைவரும் அதிர்ச்சியாலும், பயத்தாலும் உறைந்துள்ளனர்.

நிலநடுக்கம் ஏற்பட்ட 10 நிமிடங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. அதன் பின்னர் அது சரிசெய்யப்பட்டது" என்றார்.

இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அல்-ஹைவுஸ், தரோவ்டண்ட் மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். அதேபோல் குவார்ஸாஸாட், சிக்கவ்வா, அஸிலால், யூசோபியா, மாரகேஷ், அகாதிர், காசாபிளாங்கா பகுதிகளிலும் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு மட்டுமே தற்போது கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் இடிந்த கட்டிடங்களின் மதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

மொராக்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமர் மோடி, ஜெர்மனி பிரதமர் ஓலாஃப் ஷோல்ஸ் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.





↑ மொராக்கோ நாட்டில் நேற்று முன்தினம் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 1,037 பேர் உயிரிழந்தனர். நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மவுலே பிராஹிம் கிராமத்தில் இடிந்து விழுந்த மசூதி உள்ளிட்ட கட்டிடங்கள். (அடுத்த படம்) வீடு இடிந்ததால் சாலையோரத்தில் நேற்று அமர்ந்திருக்கும் குடும்பத்தினர். படங்கள்: ஏஎப்பி/ பிடிஐ

---

# சந்திரயான்-2 விண்கலம் எடுத்த லேண்டர் படங்கள்

## ▶ இஸ்ரோ வெளியீடு

● சென்னை

நிலவில் உறக்க நிலையில் உள்ள சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் படங்களை இஸ்ரோ தற்போது வெளியிட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர், 'பிரக்யான்' ரோவர் வாகனம் கடந்த ஆகஸ்ட் 23-ம் தேதி வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கப்பட்டன. லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் 12 நாட்கள் ஆய்வு செய்து பல அரிய தகவல்களையும் நமக்கு அனுப்பின. அதன் மூலம் நிலவின் வெப்பநிலை, அங்குள்ள தனிமங்கள், நில அதிர்வின் தன்மை உட்பட முக்கிய அம்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதற்கிடையே நிலவின் தென் துருவப் பகுதியில் இரவு சூழல் நிலவுவதால் லேண்டர், ரோவர் கலன்களின் இயக்கமானது முன்னெச்சரிக்கையாக நிறுத்தி வைக்கப்பட்டு அவை உறக்க நிலையில் (sleep mode) வைக்கப்பட்டுள்ளன. மீண்டும் செப்டம்பர் 22-ம் தேதி பகல் பொழுது திரும்பியதும் லேண்டர், ரோவர் கலன்களை செயல்பாட்டுக்கு கொண்டுவர விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில் நிலவை சுற்றி வரும் சந்திரயான்-2 விண்கலத்தின் ஆர்பிட்டர், உறக்கநிலையில் உள்ள லேண்டரை படம் பிடித்து அனுப்பியுள்ளது. டிஎப்சார் (DFSAR-Dual-frequency Synthetic Aperture Radar) எனும் ரேடார் கருவி மூலம் செப்டம்பர் 6-ம் தேதி இந்த படம் எடுக்கப்பட்டது. இந்த கருவி சந்திரயான்-2 ஆர்பிட்டரில் வைக்கப்பட்டிருந்தது. கடந்த 4 ஆண்டுகளாக நிலவின் துருவப்பகுதிகளை கண்காணித்து பல்வேறு படங்களை டிஎப்சார் அனுப்பி வருகிறது. அதன்படி சிவசக்தி பகுதியில் உள்ள லேண்டரையும் தற்போது படம் எடுத்து அனுப்பியுள்ளது. ஜூன் 2-ம் தேதி லேண்டர் தரையிறங்கும் முன் எடுக்கப்பட்ட படத்தையும், தரையிறங்கிய பின் எடுத்த படத்தையும் ஒப்பிட்டு இஸ்ரோ விளக்கம் அளித்துள்ளது.

இதற்கிடையே சந்திரயான்-2 விண்கலம் 2019 ஜூலை 22-ம் தேதி நிலவுக்கு அனுப்பப்பட்டது. அதில், லேண்டரை தரையிறக்கும் முயற்சி தோல்வி அடைந்தது. எனினும், நிலவின் சுற்றுப்பாதையில் ஆர்பிட்டர் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. அதிலுள்ள கருவிகள் மூலம் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது செயல்பாட்டில் இருப்பதால் சந்திரயான்-3 விண்கலத்தில் ஆர்பிட்டர் அனுப்பப்படவில்லை.

### 55 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட

# ஆப்பிரிக்க யூனியன் ஜி20 அமைப்பில் சேர்ப்பு

• புதுடெல்லி

ஜி20 அமைப்பில் ஆப்பிரிக்க யூனியன் நேற்று நிரந்தர உறுப்பினர் ஆனது. ஜி20 தொடங்கியதில் இருந்து அது, விரிவாக்கம் செய்யப்படுவது இதுவே முதல்முறையாகும்.

ஜி20 கடந்த 1999-ல் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் சேர ஆப்பிரிக்க யூனியன் பல ஆண்டுகளாக முயன்று வந்தது. ஜி20 அமைப்புக்கு இந்த ஆண்டு இந்தியா தலைமை வகிக்கும் நிலையில் இதன் உச்சி மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில், மாநாட்டுக்கு தலைமை வகிக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை தொடர்ந்து, ஆப்பிரிக்க யூனியன் புதிய நிரந்தர உறுப்பினர் ஆனது.

ஜி20 நிரந்தர உறுப்பினருக்கான இருக்கையில் அமர ஆப்பிரிக்க யூனியன் தலைவர் அசாலி அசவ்மானிக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுக்கும்போது, "அனைவரையும் அழைத்துச் செல்வது என்ற உணர்வுக்கு ஏற்ப, ஆப்பிரிக்க யூனியனுக்கு ஜி20-ல் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என இந்தியா முன்மொழிந்தது. இந்த முன்மொழிவுக்கு அனைவரும் உடன்படுவதாக நான் நம்புகிறேன்" என்றார்.

இதையடுத்து உலகத் தலைவர்கள் மகிழ்ச்சியுடன் கைதட்டி ஆப்பிரிக்க யூனியனை வரவேற்றனர். வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் பிரதமர் மோடியும் அசாலி அசவ்மானியை நிரந்தர உறுப்பினருக்கான இருக்கையில் அமர வைத்தனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது 'எக்ஸ்' சமூக வலைதளப் பதிவில், "ஜி20 குடும்பத்தில் நிரந்தர உறுப்பினராக ஆப்பிரிக்க யூனியனை வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன். இது ஜி20 அமைப்பை வலுப்படுத்துவதுடன் உலகளாவிய தெற்கு நாடுகளின் குரலையும் வலுப்படுத்தும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்திய ஆண்டுகளாக உலகளாவிய தெற்கு நாடுகளின் குறிப்பாக, ஆப்பிரிக்க கண்டத்தின் கவலைகள், சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்காக குரல் கொடுப்பதில் இந்தியா முன்னணி நாடாக உள்ளது. ஆப்பிரிக்க யூனியனை ஜி20 உறுப்பினராக சேர்ப்பதில் பிரதமர் நரேந்திர மோடி ஆர்வம் காட்டி வந்தார். இது தொடர்பாக கடந்த ஜூன் மாதம் ஜி20 தலைவர்களுக்கு பிரதமர் மோடி எழுதிய கடிதத்தில் ஆப்பிரிக்க யூனியனுக்கு முழு உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இதையடுத்து கர்நாடக மாநிலம் ஹம்பியில் கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற ஜி20 தொடர்பான கூட்டத்தில் உச்சி மாநாடு தொடர்பான வரைவு அறிக்கையில் இதற்கான முன்மொழிவு சேர்க்கப்பட்டது.

### ஆப்பிரிக்க கண்டம்

ஆப்பிரிக்க கண்டத்தில் 55 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட செல்வாக்குமிக்க அமைப்பாக ஆப்பிரிக்க யூனியன் உள்ளது. இந்த அமைப்பு 55 உறுப்பினர்களை கொண்டிருந்தாலும் ராணுவ ஆட்சியில் உள்ள 6 நாடுகள் தற்போது சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளன. மொத்தம் சுமார் 104 கோடி மக்களுடன் 3 டிரில்லியன் டாலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஆப்பிரிக்க யூனியன் கொண்டுள்ளது. உலகின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களில் 60 சதவீதமும் புதுப்பிக்கத்தக்க மற்றும் குறைந்த கார்பன் தொழில்நுட்பங்களுக்குத் தேவையான 30% தாதுப் பொருட்களையும் ஆப்பிரிக்கா கொண்டுள்ளது.